20th January 1965]

திரு. கே. ஏ. மதியழகன் : இப்பொழுது இந்தப் பண்ணைகளில் இருக்கும் பன்றிகளின் மொத்த எண்ணிக்கை என்ன என்று குறிப்பிடமுடியுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : எண்ணிக்கை விவரம் இல்லை ; எந்தெந்த இடத்தில் பண்ணைகள் இருக்கின்றன என்ற விவரம் மட்டும் இருக்கிறது.

* * * *

Prohibition

* 22 *Q.*—SRI A. SWAMIDHAS : Will the Hon. the Minister for Home be pleased to state whether there is any proposal to abolish prohibition in the State?

THE HON. SRI P. KAKKAN : No, Sir.

திரு. ஏ. சுவாமிதாஸ் : சார், மது வகைகளில், கள் அதிகப் போதை இல்லாதது ; அது ஒரு சிறந்த உணவாகவும், மருந்துப் பொருளாகவும் இருப்பதால், கள் மட்டும் கிடைக்க, கள்ளுக் கடைகள் திறக்க உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : கள்ளால்தான் குடியெல்லாம் கெட்டது. கள்ளுக்கடை திறப்பதாக உத்தேசம் இல்லை.

திரு. இராம. அரங்கண்ணல் : சார், சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு லைசென்சுகள் தாராளமாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றனவா அல்லது சிக்கனமாக வழங்கப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : அவரவர்களுடைய நிலைமையைப் பார்த்து கொடுக்கப்படுகிறது. நோயாளிகளாக இருந்தால் அவர்களுக்குக் கொடுக்கப்படும். வெறுமனே பிஸினஸ் பண்ண என்று வந்தால் அதை மறுத்துவிடுகிறோம்.

திரு. கரு. சீமைச்சாமி : கள் வேண்டுவோர் மாநாட்டில் இது சம்பந்தமாகத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு அனுப்பப்பட்டிருக்கின்றனவா ? அதன் விவரம் என்ன ? 9-00 a.m.

கனம் திரு. பூ. கக்கன் : அந்தத் தகவல் என்னிடம் இப்பொழுது இல்லை.

திரு. இராம அரங்கண்ணல் : நான் கேட்ட கேள்வியினுடைய நோக்கம் சர்க்கார் லைசன்ஸ் வழங்குவதில் தாராளமான கொள்கையைக் கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு அனுசரிக்கறதா என்பதாகும். அதற்கு அமைச்சர் அவர்களிடமிருந்து நேரடியான பதிலை விரும்புகின்றேன்.

கனம் திரு. பூ. கக்கன் : வியாதிக்கு மருந்து என்ற வகையில் கோருகிறவர்களுக்கு இது மெடிகல் சர்ட்டிபிகேட் பேரில், கொடுக்கப்படுகிறது. அப்படிப்பட்டவர்கள் விஷயத்தில் தாராளமாக

**** Expundged as ordered by the chair.

[20th January 1965

அனுமதிக்கப்படுகிறது. ஆனல், குடிப்பதற்காகவே அனுமதி கோருகிறவர்கள் விஷயத்தில் கடுமையாக இருந்து, அவர்களுக்கு அனுமதி கொடுக்கமாட்டோம்.

திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை : மது விலக்குக்காக அநேக சட்டங்கள் கொண்டு வந்த போதிலும், அவற்றினல் மக்களுக்குப் பலன் ஏற்பட்டிருந்தபோதிலும், அதற்கு மாருக, ' மதுகாசம்' என்ற பெயரில் அதிக போதையுள்ள மருந்து பாட்டில்கள், எங்கு பார்த்தாலும் விற்றுக்கொண்டு இருக்கின்றன. அவற்றுக்கு சர்க் காருடைய லைசென்சும் இருப்பதாகத் தெரிகிறது. அப்படிப்பட்ட மருந்துகளைத் தடை செய்வதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : அதுவும் அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்திருக்கிறது. அதுபற்றியும் போலீசாருக்குத் தெரிவித்துக் கவனிக்க சொல்லியிருக்கிறேம்.

திரு. ஏ. சிதம்பரநாத நாடார் : கன்யாகுமரி மாவட்டத்தில் அரிஷ்டக் கடை ஏற்பட்டு நடந்துகொண்டிருக்கிறது. அந்த அரிஷ்டத்தில் கூடுதலான சாராயம் கலக்கப்பட்டிருக்கிறது என்ப தால் மக்களிடத்திலே ஒரு பரபரப்பு இருக்கிறது. அந்த அரிஷ் டத்தை விற்பதற்கு இந்த சர்க்கார் அனுமதி கொடுத்திருக்கிறது. ஆனல், அரிஷ்டத்தைக் குடித்துவிட்டு வருகின்ற நபர்களை போலீசார் ரகசியமாக நின்று கொண்டிருந்து பிடித்துப் போகவும் இந்த சர்க்கார் ஏற்பாடு செய்திருக்கிறது. இந்த நிலையில் அந்த அரிஷ்டக் கடைகளை உடனடியாக அடைப்பதற்கு சர்க்காருக்கு ஏதாவது உத்தேசம் உண்டா ?

கனம் திரு. பூ. கக்கன் : கன்யாகுமரி ஜில்லாவிற்கு நான் சென்றி ருந்தபோது இதுபற்றி அங்கு சில நபர்கள் என்னிடம் சொன்னர் கள். அதுபற்றி அங்குள்ள ஜில்லா போலீஸ் அதிகாரியிடம் சொல்லிவிட்டு வந்திருக்கிறேன். அம்மாதிரி அரிஷ்டக் கடை வைத்து, மக்களுக்குக் கெடுதி ஏற்படுமானல் அதைப்பற்றி அரசாங்கம் கவனிக்கும் என்பதைக் கனம் அங்கத்தினருக்கு நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

திரு. இராம. அரங்கண்ணல் : சென்னை மகநகரத்தைப் பொறுத்தவரையில், கடந்த ஆறு மாதங்களாக, மதுரை மாவட் டத்தில் ஓரிடத்திலிருந்து ஆயுர்வேத மருந்துகள் என்ற முறையில் பல டானிக்குகள் வெளிப்படையாகத் தயாரிக்கப்பட்டு விற்றுக் கொண்டிருக்கின்றன. அது போதை நிரம்பிய பொருளாகும். அதுபற்றிப் போலீசார் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றல், அவை ஆயுர்வேத மருந்துகள் என்று சொல்லப்பட்டு, அதனல் நட வடிக்கை எடுக்க முடியாமல் திண்டாடுவதாகப் போலீஸ் தரப்பில் எடுத்துச் சொல்லப்படுகிறது. அப்படிப்பட்டவைகளைத் தடுப்ப தற்கு அரசு ஏதாவது தனிச் சட்டம் கொண்டு வருமா ?

கனம் திரு. பூ. கக்கன் : அது பற்றி அரசாங்கம் போலீசாரை வைத்துப் பரிசீலனை செய்யும்.

திரு. சா. கணேசன்: 'அரிஷ்டம்' என்பது ஆயுர்வேத முறையில் மகோன்னதமான ஒரு டானிக் ஆகும். ஆகவே, அரிஷ் டத்தை மொத்தமாகத் தடை செய்வது என்று எண்ணுமல், தகுதி

20th January 1965]

யற்ற, பயனற்ற, அல்லது அதைத் தயாரிப்பதற்கு வேண்டிய கல்வியறிவு, முன் அனுபவம் முதலியவை இல்லாத சாதாரணப் பேர்வழிகள் அரிஷ்டம் என்ற பெயராலே செய்கிற ஒன்றை மட்டும் தடை செய்யவேண்டும். அரிஷ்டம் என்கிற உயர்ந்த டானிக் செய்ய நல்ல ஆயுர்வேத பார்மஸிகளுக்குத் தடை இல்லாத வகையிலே அரசாங்கம் இதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். அப்படிச் செய்ய அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்பு கிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : கனம் அங்கத்தினர் சொன்னபடி, அரிஷ்டம் செய்வதிலே சில கெட்ட பேர்வழிகள் ஈடுபட்டிருக் கிறார்கள். அதற்காகத்தான் அதிகாரிகளை வைத்துப் பரிசீலனை செய்து, அதன் பிறகு முடிவு கட்டவேண்டுமென்று உத்தேசித்தி ருக்கிறோம்.

திரு. ஜே. மாதா கவுடர் : ஏழைகள் குடித்துக் கெடக்கூடாது என்பதுதான் மதுவிலக்குத் திட்டத்தைக் கொண்டுவந்ததன் நோக்கமாகும். ஆனால், பெரிய பணக்காரர்களுக்கு வருமான வரி கட்டக்கூடியவர்களுக்கு தாராளமாகப் பர்மிட் கொடுக்க என்ன ஆட்சேபனை இருக்கிறது?

கனம் திரு. பூ. கக்கன்: பொது ஜனங்களில் ஏழைகளாக இருந் தாலும் பணக்காரர்களாக இருந்தாலும் யாரும் குடித்துக் கெட்டுப் போகக்கூடாது என்பதுதான் அரசாங்கத்தின் நோக்கம். யாருக்கு அவசியம் என்று சொல்கிறார்களோ அவர்களுக்கு மெடிக்கல் சர்ட்டிபிகேட்டின் பேரில் கொடுக்கப்படு கிறது. குடிக்காவிட்டால் ஆபத்து வரும், உயிருக்குச் சேதம் உண்டாகும் என்ற காரணத்திற்காக மனுச் செய்துகொள்ளும் போது, அப்படிப்பட்டவர்களுக்கு பர்மிட் கொடுக்கப்படுகிறது. பணக்காரர்கள் குடிக்கவேண்டும், ஏழைகள் குடிக்கக்கூடாது என்ற பாகுபாடு எதுவும் இல்லை.

திரு. டி. கார்ச்சா கவுடர் : நீலகிரி ஜில்லா குளிர்ப் பிரதேச மாக இருப்பதால், அங்கு மெதிலேடெட் ஸ்பிரிட்டுக்குப் பர்மிட் வாங்கி வைத்துக்கொண்டு, மெதிலேடெட் ஸ்பிரிட்டை சோடா விலோ, தண்ணீரிலோ கலந்து பலர் குடித்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, நீலகிரி ஜில்லாவில் மெதிலேடெட் ஸ்பிரிட் வருவதை அரசாங்கம் தடை செய்யுமா?

கனம் திரு. பூ. கக்கன் : அம்மாதிரி தனிப்பட்டவர்கள் ஏதாவது 'மிஸ்-யூஸ்' செய்வது அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டால் அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. இராம. அரங்கண்ணல் : சென்னைமாநகரத்தைப் பொறுத்த வரையில், வெளிநாடுகளிலிருந்து வருகின்ற கப்பல்கள்மூலம் உயர்ந்த மது வகைகள் வருவதாகவும், அவைகளைத் தடுப்பதற்குப்

போதிய மின்விசைப் படகுகள் இல்லை என்றும் மாவட்ட மது விலக்குக் கவுன்சிலில் சொன்னார்கள். அப்படியானால், போதிய மின்விசைப் படகுகளை வாங்க அரசுக்கு உத்தேசம் உண்டா?

கனம் திரு. பூ. கக்கன் : அத்தகைய மின்விசைப் படகுகளை வாங்குவது நல்லது என்று போலீஸ் அதிகாரிகள் நினைத்து, அரசாங்கத்திற்கு அவர்கள் வேண்டுகோள் விடுப்பார்களானால் நிச்சயமாக அதுபற்றி அரசாங்கம் கவனிக்கும் என்று தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

* * * *

திரு. முனு ஆதி: வருமான வரி கட்டுகின்ற வசதி படைத்தவர் களுக்கு அரசாங்கம் பிராந்தி பர்மிட் கொடுக்கிறதா? அப்படி அவர்களுக்குப் பர்மிட் கொடுக்கப்படுமானால், ஏழைகளுக்குக் கள் பர்மிட் கொடுக்கப்படுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இந்தக் கேள்விக்கு விடை அளிப்பதைத் தவறுதலான கருத்திலும் எடுத்துக்கொள்ளலாம். "வருமான வரி கட்டுகிறவர்களுக்குப் பர்மிட் கொடுக்கப்படுமா? என்று கேள்வி கேட்டால், "ஆம்" என்று பதில் சொல்லலாம். அதற்கு மேலே வியாக்கியானம், வருமான வரி கட்டுகின்றவர்க ளுக்குத்தான் பர்மிட் கொடுக்கிறார்கள் என்று வரும். வருமான வரி கட்டுகின்றார்களா, இல்லையா என்பது முக்கியம் அல்ல. மெடிகல் சர்ட்டிபிகேட் பேரில் இந்தப் பர்மிட் கொடுக்கப்படு கிறது.

* * * *

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : நம்முடைய மாநிலத்தில் மட்டும் இந்த மது விலக்குச் சட்டம் அமுலில் இருந்து, பக்கத்தில் இருக்கும், புதுவை மாநிலம், கேரளாவில் கோட்டயம், மற்றும் பங்களூர் போன்ற பகுதிகளில் மதுவிலக்குச் சட்டம் அமுலில் இல்லாத காரணத்தால் அங்கிருந்து ஏராளமான மது வகைகள் இங்கே கடத்திக்கொண்டு வருவது அரசாங்கத்திற்குத் தெரியுமா? அப்படி இருக்குமானால், அதனைத் தவிர்ப்பதற்காக அந்தந்த இடங்க ளிலும் மது விலக்குச் சட்டத்தைக் கொண்டுவரவேண்டுமென்று அந்த மாநில சர்க்கார்களோடும் மத்திய சர்க்காரோடும் நம்மு டைய அமைச்சரவை தொடர்பு கொண்டு, மதுவிலக்கை அங்கேயும் கொண்டுவர முயற்சிப்பார்களா?

கனம் திரு. பூ. கக்கன் : முயற்சிப்பது என்பது பிரச்சினை அல்ல. நம்முடை மாநிலத்தில் வேறு மாநிலங்களிலிருந்து மது வகைகள் வரக்கூடாது என்ற கருத்தில், அதைத் தடுக்க எவ்வளவு தூரம் நடவடிக்கை எடுக்கவேண்டுமோ அதை இந்த அரசாங்கம் எடுத்துக்கொண்டு இருக்கிறது.

திரு. தா. சின்னசாமி : தலைவர் அவர்களே, வாகன வசதி உள்ள வர்கள் சாராய பாட்டில், பிராந்தி பாட்டில்களைத் தங்கள் வாகனங்கள் மூலமாகக் கொண்டுவந்து வியாபாரம் செய்து பெரிய

**** Expunged as ordered by the Chair.

பணக்காரர்களாகிருர்கள். ஏழைகளாக இருக்கிறவர்கள், போலீசாருக்கு உடந்தையாக இருக்கிறவர்கள், எப்போதுமே வழக்கம் போல் சாப்பிட்டுக்கொண்டு எல்லா ஊர்களிலும் நடமாடுகிருர்கள். போலீசாருக்கு ஏதாவது கேஸ் கிடைக்கவில்லையென்ருல், வேண்டுமென்றே சரக்குப் பாட்டிலை வைத்துக்கொண்டு பிடித்துக்கொண்டு வந்து வைத்து, சாப்பாடு போட்டு, அரசாங்கத்திற்கு நஷ்டம் ஏற்படுத்துகிருர்கள். இதை அரசாங்கம் உடனடியாகப் பரிசீலனை செய்து, ஏதாவது வழிவகை செய்யுமா?

கனம் திரு. பூ. கக்கன்: கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மன்றத்திலே கனம் அங்கத்தினர் எந்தக் கேள்வி வேண்டுமாஞலும் போடலாம் என்ருலும், கனம் அங்கத்தினர் குறிப்பாகச் சொல்லவேண்டும். எந்த ஊரில், யார் அம்மாதிரி உடந்தையாக இருக்கிருர்கள் என்று கனம் அங்கத்தினர் தெரிவித்தால் தக்க நடவடிக்கை எடுப்பதற்கு உதவியாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

திரு. ம. கமலநாதன்: மிக்க வசதி படைத்த ஒருவருக்கு பர்மிட் கொடுக்கலாம் என்று டி.எம்.ஓ. சிபார்சு செய்த பிறகும், அவர்கள் அந்த பர்மிட்டை துஷ்பிரயோகம் செய்யமாட்டார்கள் என்பதற்குப் போதுமான உத்தரவாதம் இருந்தும் அவர்களுக்கு பர்மிட் வழங்காமல் அத்தகையவர்களைப் பொறுத்த வரையிலும்கூட அமைச்சர் பரிசிலனை செய்து பர்மிட் வழங்கிஞலும் வழங்கலாம், ரிஜெக்ட் செய்தாலும் செய்யலாம் என்ற அதிகாரம் எடுத்துக் கொள்ள வேண்டிய அவசியம் என்ன? டி.எம்.ஓ. சிபார்சு செய்தால் பர்மிட் வழங்குவது என்று வைக்கக்கூடாதா?

கனம் திரு. பூ. கக்கன்: மெடிகல் சர்டிபிகேட் மூலம் துஷ்பிரயோகம் நடைபெறக்கூடாது என்பதற்காகத்தான் அந்த அதிகாரத்தையும் அரசாங்கம் வைத்துக் கொண்டிருக்கிறது.

MR. SPEAKER: There may be spurious certificates.

திரு. மீ. கலியாணசுந்தரம்: மதுவிலக்கு சட்டம் அமுலில் இருந்தும் குடிப்பதும், கள்ளச் சாராயம் காய்ச்சுவதும் அதிகமாகத்தான் இருக்கிறது என்பதை இங்கே கொடுக்கப்பட்டுள்ள தகவலில் இருந்து தெரிந்து கொள்ளலாம். அதுவும் மதுவிலக்குச் சட்டத்தை அமுல் நடத்தும் பொறுப்பை போலீசாரிடம் ஒப்படைத்திருப்பதனுல்தான் போலீசாரிடத்திலேயே தாக் குறைவு ஏற்பட்டு வருகிறதோ என்று எண்ண இடமேற்படுகிறது. ஆகவே அதற்கென்றே தனிப் படையை ஏற்படுத்தும் உத்தேசம் உண்டா? அது விஷயம் ஆலோசிக்கப்பட்டதா?

கனம் திரு. பூ. கக்கன்: ஏற்கெனவே எக்சைஸ் டிபார்ட் மெண்டிடம்தான் இருந்தது. அப்போது சரியாக அமுல் நடத்தப் படவில்லை என்ற காரணத்திஞல்தான் போலீஸ் இலாகாவினரை மேற்கொள்ள வைத்தோம். பெரிய போலீஸ் அதிகாரிகளை எல்லாம் அவ்வப்போது அழைத்து வைத்து இந்தச் சட்டத்தை நல்ல முறையில் நிறைவேற்ற வேண்டுமென்று தெரிவித்துக் கொண்டிருக் கிறேம்.

[20th January 1965

கனம் திரு. எம். பக்தவத்சலம் : மற்ற பல குற்றச் சட்டங்களைப் போலவே இதுவும் ஒரு குற்றச் சட்டம். மற்ற சட்டங்களை அமுல் நடத்துவது போலவே இந்தச் சட்டத்தையும் போலீசார்கள் நிறைவேற்றி வருகிறார்கள். இதற்காகத் தனி இலாகா என்று ஏற்படுத்துவது அவசியம் இல்லை.

திரு. கே. பொன்னையன் : மதுவிலக்கு அட்வைசரி கமிட்டி கூட்டமானது மூன்று மாதத்திற்கு ஒரு தடவை ஜில்லா மட்டத்தில் நடந்து கொண்டிருந்தது. இப்போது இல்லை. அதேமாதிரியான நிலையை மீண்டும் ஏற்படுத்த முடியுமா? மற்ற தாலூக்காக்களில் நடைபெறும் செய்தியை அப்போதுதான் தெரிந்து கொள்ள வசதியாக இருக்கும்.

கனம் திரு. பூ. கக்கன் : டெவலெப்மெண்டு கவுன்சில் இதுபற்றியெல்லாம் நல்லமுறையில் பரிசிலனை செய்து வருவதால் இந்த கமிட்டிக்கு அவசியம் இல்லை என்று அரசாங்கத்தார் எடுத்து விட்டார்கள். இப்போது அந்த அந்த தாலூக்கா மட்டத்தில் அமைந்திருக்கிறது என்று சொல்ல விரும்புகிறேன்.

Sharing of Cauvery waters

*23 *Q.*—Sri M. KALYANASUNDARAM :
Sri K. A. MATHIALAGAN : } Will the Hon. the Minister for Food be pleased to state :

(*a*) whether any meeting took place as proposed at the metting of the Southern Zonal Council held at Hyderabad on 28—5—1963, between the Chief Minister of Madras and the Chief Minister of Mysore to discuss the issues relating to the sharing of the Cauvery waters, and the Hogenakkal Power Project; and

(*b*) the present stage of the negotiations ?

The Hon. Sri R. VENKATARAMAN : (*a*) No.

(*b*) Does not arise.

Shading of waters of west-flowing rivers.

*24 *Q.*—Sri M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Food be pleased to state with reference to the Question No. 224 answered on 11th Marh 1964 the steps taken regarding the schemes of sharing water from the west-flowing rivers ?

The Hon. Sri R. VENKATARAMAN : The reply of the Government of Kerala is still awaited.

திரு. மீ. கலியாணசுந்தரம் : இரண்டு ராஜ்ய முதல் அமைச்சர்களும் சந்தித்துப் பேசுவதாக இருந்ததே. சந்தித்துப் பேசப்பட்டதா? அப்படியானால் அதன் விவரம் என்ன?